### நாகை, கிருஷ்ணகிரி, நீலகிரி, சென்னை மாவட்டங்களில்

# அரசுப் பள்ளிகளை மேம்படுத்த - சன் டி.வி. ரூ.6.85 கோடி நிதி உதவி!



சென்னை, செப்.8-

கிருஷ்ணகிரி, நீலகிரி, சென்னை ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளை மேம்படுத்த சன் டி.வி. 6 கோடியே 85 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவ சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தில் அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதற்காக சன் டி.வி. 6 கோடியே 85 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் உறுப்பினர் செயலரும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான சுதனிடம் சன் டி.வி. குழுமத்தின் நிர்வாக இயக்குநர் காவேரி கலாநிதி மாறன் வழங்கினார்.

தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் நோக்கில் 'நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் மூலம் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' எனும் திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த 2022 டிசம்பர் மாதம் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு அரசின் நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் மூலமாக, சன் டி.வி. அளித்த இந்த நிதியின் மூலம் சென்னை, நாகை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களில் உள்ள அரசுப்பள்ளிகளில் புதிய வகுப்பறை கட்டுமானம், வகுப்பறைகள் சீரமைத்தல், ஆய்வகங்கள் அமைத்தல், மேஜை, இருக்கைகள் வசதி, நாப்கின் இயந்திரங்களை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் உறுப்பினர் செயலர் சுதன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக சுதன் மேலும் கூறியதாவது:-

சன் டி.வி. வழங்கும் இந்த நிதியின் மூலம், சென்னை, நாகை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களில் மொத்தமாக 149 அரசு பள்ளிகளில் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன. இந்த நிதியின் மூலம் சுமார் 23 ஆயிரம் அரசு பள்ளி மாணவர்கள் பயனடைவார்கள். இந்த 4 மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளில் உள்ள அதிக மாணவர்கள் பயிலும், உதவிகள் கிடைக்காத, உடனடியாக உதவிகள் தேவைப்படுகிற பள்ளிகளை கண்டறிந்து, அந்த பள்ளிகளின் தேவைகள் குறித்து கேட்டறிந்து வசதிகள் செய்து தரப்படும். அதன்படி, சென்னை அண்ணா நகரில் 4 அரசுப் பள்ளிகளில் வகுப்பறைகள் சீரமைத்தல், போர்வெல் போடுதல் மற்றும் புதிய வகுப்பறை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதேபோல் அடையாறு பகுதியில் உள்ள அரசுப் பள்ளியில் புதிய பல்நோக்கு கொட்டகை அமைக்கப்பட உள்ளது.

நாகை மாவட்டத்தில் நாகை, கீழ்வேளூர், தலைஞாயிறு, திருமருகல், வேதாரண்யம் ஆகிய பகுதிகளில் உள்ள 129 பள்ளிகளில் புதிதாக நாப்கின் இயந்திரங்கள் வைக்கப்பட உள்ளன. கிருஷ்ணகிரி பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் மேஜை, இருக்கைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, வகுப்பறைகள், ஆய்வுக்கூடம் சீரமைத்தல், ஸ்மார்ட் போர்டு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நீலகிரி மாவட்டத்தில், கூடலூரில் 11 பள்ளிகள், கோத்தகிரி, ஊட்டியில் தலா ஒரு அரசுப் பள்ளி என 13 அரசுப் பள்ளிகளிலும் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்பட உள்ளன. அரசுப் பள்ளிகளை மேம்படுத்த நிதி பங்களிப்பு அளித்த சன் டி.வி. குழுமத்திற்கு நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வின்போது நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் மாநில ஒருங்கிணைப்பாளர் காயத்ரி, திட்ட இயக்குநர் அஜித் மத்தாய், கார்ப்பரேட் தொடர்பு அலுவலர் சுவாமிநாதன் பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.

### இன்று அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் – முன்னாள் அமைச்சர்

# பொன்.முத்துராமலிங்கம் இல்ல மணவிழா! அமைச்சர்கள் வாழ்த்துரை!

### அமைச்சர்கள் ஐ. பெரியசாமி – தங்கம் தென்னரசு – பி.மூர்த்தி முன்னிலை!

மதுரை, செப். 8-

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் -மல்லிகா இணையரின் பெயரனும், பொன்ராாசன் - அன்னலட்சுமி இணையரின் புதல்வருமான இன்ஜினியர் பொன் முகிலுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி பி.கே. முரளி - எம்.ரூபா இணையரின் புதல்வி டாக்டர் லக்ஷிதாவுக்கும் மணவிழா இன்று (8.9.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் மதுரை மாநகர் சூர்யா நகர் துவாதசாந்தம் கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகிக்கிறார்.

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் - மல்லிகா இணையர் அனைவரையும் வரவேற்று உரையாற்றுகின்றனர்.

இத்திருமணத்தை வேலம்மாள் கல்வி நிறுவனங்களின் குழுமத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் - திருமதி குஞ்சரவள்ளி இணையர் நடத்தி வைக்கின்றனர்.

இம்மணவிழாவில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அர.சக்கரபாணி, தா.மோ. அன்பரசன், கே.ஆர்.பெரியகருப்பன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், மாணிக்தாகூர், நவாஸ் கனி, மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி எம். மணிமாறன், ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ., காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மேயர் இந்திராணி பொன் வசந்த், எழுத்தாளர் பாரி முடியரசன்,

மதுரை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள் குழந்தைவேலு, வேலுச்சாமி, ஒச்சுபாலு, ஜெ. மூவேந்திரன், எஸ்.ராஜசேகர் (எ) ராகவன், சி.சின்னம்மாள், முருகவேல், மா. ஜெயராம், கே.தனச்செல்வம், மாநகராட்சி நிர்வாகிகள் முகேஸ் சர்மா, சரவண புவனேஸ்வரி, வாசுகி சிவக்குமார், பாண்டீஸ்வரி மிசா பாண்டியன், சபிதா விமல், ஜெயராஜ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

முன்னாள் அமைச்சர் சுப.தங்கவேலன், மயூரா ஜெயகுமார், எல்.மூக்கையா, கம்பம் ராமகிருஷ்ணன், தங்க தமிழ்ச்செல்வன், ஏ.பழனிச்சாமி, எஸ். மோகன்குமார், பால் பாண்டி, அபிராமம் மோகன், ரைஸ் மில் பால சுப்பிரமணியன், எஸ்.ஆர். கோபி, முத்துப்பாண்டியன், முத்துக்குமார், துரை எழில் விழியன், கரு தியாகராசன், செல்வம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் நன்றி கூறுகிறார்.



சிங்கப்பூரில் நடைபெற்ற 'சென்னை சங்கமம்' நிகழ்ச்சியில் சிங்கப்பூரின் மெரினா வளைகுடாப் பரப்பில் கடலோரத்தில் அமைந்திருக்கும், எஸ்பிளனேட் திறந்தவெளி அரங்கில் மரபுக் கலைஞர்கள், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்ட காட்சி. இந்திய மரமுடைபைச் சங்கத்தின் பொது மேலாளர் மரியா பவானிதாஸ், அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் முனைவர் ஜி.வி.இராம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.


